பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 66

வெள்ளிக்கிழமை
31 ஜனவரி 2025

தை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பொருள்களுக்கு
விலை
குறைப்பு
» 03

## ஜனாதிபதி இன்று யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 31
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார். ☞11

ஜனாதிபதியின் யாழ். வருகை

## போராடத் தடைவிதிக்க யாழ்.நீதிமன்றம் மறுப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 31
ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணத்தின்போது, அவருக்கு எதிர்ப்பையும், தமது பிரச்சினைகளையும் வெளிப்படுத்தும் வகையில் நடத்தப்படவுள்ள ☞11



## மாவைக்கு அநுர நேரில் அஞ்சலிப்பு?

யாழ்ப்பாணம், ஜன. 31
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள நிலையில், அவர் தமிழரசின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு நேரில் ☞11

# பெருந்தலைவர் மாவைக்கு மக்கள் திரளாக அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜனவரி 31

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு நேற்றிலிருந்து பெருமளவான மக்கள் திரள்திரளாக அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அத்துடன், அரசியற்கட்சிகளின் முக்கியஸ்தர்கள், தூதரக அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் மாவையை அஞ்சலித்து வருகின்றனர். ☞11

## புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தமிழரசின் விசேட குழுவிடம் முடிவு

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31
புதிய அரசியலமைப்புத் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவே முடிவுகளை அறிவிக்கும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். ☞11



## வடக்கு தனிநாடாவதை தடுத்தவராம் மஹிந்த!

கொழும்பு, ஜன. 31
மஹிந்த ராஜபக்ச நாட்டின் தேசிய சொத்து. அவரால்தான் வடமாகாணம் பிரிந்து தனிநாடாவது தடுக்கப்பட்டது. எனவே, மஹிந்தவுக்குரிய அரச வதிவிடம் மற்றும் பாதுகாப்பு என்பன வழங்கப்பட வேண்டும் என்று எஸ்.எம். ரஞ்சித் சமரகோன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மஹிந்த ராஜபக்சவை நாம் அனைவரும் மதிக்கின்றோம். அவர் தேசிய சொத்து. அவருக்குத் தீங்கு ஏற்படுவதை எவரும் விரும்பமாட்டார் ☞11

## சுதந்திரதினத்தன்று தமிழில் தேசியகீதம்

கொழும்பு, ஜன. 31
சுதந்திரதின நிகழ்வுகளின்போது தமிழிலும் தேசியகீதம் இசைக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ளது.
77ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ☞11

## தொழுநோயாளர்களில் 12 வீதம் சிறுவர்கள்!

வெளியான அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜன. 31
நாட்டில் கடந்த ஒரு வருடத்தில் ஆயிரத்து 800 தொழுநோயாளிகள் பதி ☞11

## அரச நிதியை கையாள்வதற்கு மாவட்டந்தோறும் தனியான குழு

கொழும்பு, ஜன. 31
அரச நிதியைக் கையாள்வதில் ஏற்படும் சட்டச்சிக்கல்களை தீர்த்துவைக்கும் நோக்குடன் மாவட்டங்கள் தோறும் தனியான குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.
நீதி அமைச்சாலேயே இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. துறைசார் நிபுணர்கள் இந்தக் குழுவில் அங்கத்தவர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.
முதல் கட்டமாக கொழும்பு, ☞11




'சக்கடத்தார் ஏறிவிழுந்த
அதே குதிரையில தான்
உவர் அநுரவும் ஏறுறார்
கண்டியளோ...'

கோட்டை – காங்கேசன்துறை

## தபால் ரயில்சேவைகள் இன்றுமுதல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 31
கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான தினசரி இரவு தபால் ரயில்சேவைகள் இன்றுமுதல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தினமும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இரவு 8 மணியள ☞11

## ஹெரோய்னுடன் பெண் கைது!

வவுனியா, ஜன. 31
வவுனியாவில் உயிர் கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் வயோதிபப் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா ☞11

## போதையில் அடாவடி; கைதானார் மதகுரு!

வவுனியா, ஜன. 31
வவுனியா, ரயில்நிலைய வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மது போதையில் அடாவடித்தனம் புரிந்த இந்து மதகுரு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
போதையில் உணவகம் ஒன்றுக்குச் சென்ற அந்த மதகுரு, கண்ணாடி ☞11



மக்கள் மனம் கவர்ந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியல்கைதிகளை விடுவித்த பின் யாழ். வரவேண்டும் அநுரகுமார!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.31

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைச் செய்தியுடன் அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழ் அரசியல் கைதிகள் 30 ஆண்டுகளாகச் சிறைகளில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டபோதும், தற்போதும் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களைப் போன்று தமிழ் அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார். (எ-125)

# விடுதலைப் போராட்டத்தின் சிறந்த போராளிக்கு அஞ்சலி

## சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் முதன்மைப் போராளிகளில் ஒருவருமான மாவை சேனாதிராஜாவின் மறைவுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணி, இளைஞர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றில் பல பொறுப்பான பதவிகளைப் பெற்றுக்கொண்ட மாவை அண்ணர் அவற்றின் ஊடாகத் தனது கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் தன்னாலியன்றவரை கடமைகளைச் செய்திருந்தார்.

தமிழரசுக் கட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தவர்களில் முக்கியமானவர் மாவை அண்ணர். தமிழரசுக் கட்சியின் மையமாகச் செயற்பட்டிருந்த தலைவர்கள் வரிசையின் முடிவாக மாவை அண்ணரின் மறைவு அமைந்துவிடுமோ என்பது இன்று தமிழ்த் தேசியவாதிகள் பலரினதும் கவலையாக உள்ளது. ஓர் இனத்தின் தலைவன் எனும் இடத்தை அடையும் வரையிலான அவரது விடுதலை நோக்கிய பயணம், அனைத்து இளைஞர்களுக்குமான அரசியல் பாடமாக அமையும் என்பது மட்டும் நிச்சயம்- என்றார். (ச-28,27)

# மழையுடனான காலநிலை; யாழில் காற்றுமாசு வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 31

தற்போது மழையுடனான காலநிலையால் காற்றுமாசு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருவகால மாற்றத்தால் இந்தியாவிலிருந்து காற்றுச்சுழற்சியின் மூலம் இலங்கைக்கு காற்றுடன் மாசு வருகின்றது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வளித்தரச் சுட்டெண் 60 முதல் 120 வரை சுகாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலையில் காணப்பட்டது. நேற்றையதினம் யாழ்.மாவட்டத்தில் மழைவீழ்ச்சி பதிவானதன் காரணமாக வழித்தரச் சுட்டெண் 60க்கும் குறைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை சாதாரண காலநிலை தொடர்கின்ற பட்சத்தில் காற்றின் மாசு மீண்டும் அதிகரிக்க கூடிய நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

### பலாலியில்

# 6 கிலோ கஞ்சாவுடன் வீட்டில் ஒருவர் கைது


யாழ்ப்பாணம், ஜன. 31

பலாலிப் பொலிஸ் பிரிவில் பலாலி வடக்கு, அந்தோனிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் பெருந்தொகை கஞ்சாவுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபரின் வீட்டில் 6.155 கிலோகிராம் கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர் பலாலிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-125)

# தமிழ் மக்களின் குரல் ஓய்ந்தது

## சஜித் இரங்கல்



கொழும்பு, ஜன. 31

நாடாளுமன்ற, முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான மாவை சேனாதிராஜாவின் மறைவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தனது தனது பேஸ்புக் பக்கத்தில், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து முன்நின்று, நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பிய மாவை சேனாதிராஜாவின் மறைவு பேரிழப்பாகும்.

அவரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# பேரினவாதத்துக்கு எதிரான அடையாளம் மறைந்தது

## சுமந்திரன் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 31

பேரினவாதத்துக்கு எதிரான மாபெரும் அடையாளமாக ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் திகழ்ந்தவர் மாவை சேனாதிராஜா என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி வெளியிட்ட இரங்கல் செய்திக் குறிப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவை அண்ணன் பேரினவாதத்துக்கு எதிரான மாபெரும் அடையாளமாக ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் திகழ்ந்தவர். 1970 ஆம் ஆண்டுகளில் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவரும் ஆவார். அவரது மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**சுபிரி தன சம்பத** DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை | 0440 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| E | 6 5 3 3 2 6 |

**Super Ball** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2706 | L | 28 54 56 59 |

**சனிதா** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Z | 04 08 12 17 | 4867 |

**SASIRI** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0611 | 09 32 49 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை |

| | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| கடகம் | 05 08 22 37 | 4418 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| V | 08 | 01 43 44 70 | 1882 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 30.01.2025 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| P | 06 10 21 66 | 2532 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியா மாவட்டத்தில்
# வெள்ளத்தால் பயிரழிவு ரூ. 16.817 மில். ஒதுக்கீடு

வவுனியா, ஜன.31

**வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் நெற்செய்கை பாதிப்படைந்த விவசாயிகளுக்கு 16.817 மில்லியன் ரூபா நட்டஈட்டை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்துள்ளார்.**

கடந்த வருடம் நவம்பர் மாதம் வெள்ளத்தால் நெற்பயிர்கள் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கான நட்டஈடு வழங்கும் நடவடிக்கை பொலநறுவை, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 1397.2 ஏக்கர் அளவில் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பாதிப்புக்காக ஆயிரத்து 160 விவசாயிகளுக்கு 16.817 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள் ளது. இந்த நட்டஈட்டுத் தொகை பெப்ரவரி மாதம் முதலாம் வாரத்தில் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25,110)





நெல்லியடியில பச்சை குத்திற கடை ஒண்டுக்கு பிரதேசசபை சீல் வைச்சு மூடியிருக்கு. அப்பிடி சீல் வைச்சதுக்குக் காரணம், அங்க பச்சை குத்தின ஒரு பதினாலு வயசுப் பொம்பிளைப் பிள்ளைக்கு ஏற்பாக்கி மந்திகை ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கினம். 18 வயதுக்குட்பட்ட சின்னப்பிள்ளையளுக்கு இப்பிடி உடம்பில காயம்வரப் பண்ணிற அளவுக்கு பச்சை குத்துறது சட்டப்படி சிறுவர் துஷ்பிரயோகம். அந்தப் பிள்ளையள் விரும்பி வந்து குத்தினாலும் குற்றம் தான். அதாலதான் அந்தப் பச்சை குத்திற கடைக்குச் சீல் வைக்கோணும் எண்டு முடிவெடுத்தவை. ஆனால் அங்க ஒரு பிள்ளையை ரேப் பண்ணிப் போட்டினம் எண்டதாலதான் சீல் வைச்சவையெண்டு கதையள் பரவிட்டுது. அது உண்மையில்லை. ஆனால் அந்தக் கடைக்குச் சீல் வைக்கேக்க பொம்பிளைப் பிள்ளையளுக்கு பச்சை குத்தேக்க எடுத்த படங்கள் இருந்ததாம். அந்தப் படங்களில கண்ட கண்ட (மற்றவை காணக்கூடாத) இடங்களில பொம்பிளைப் பிள்ளையள் பச்சை குத்தியிருக்கினம் எண்டதும் தெரியவந்திருக்குது.

நெல்லியடியில மட்டும்தான் இப்பிடிப் பச்சைகுத்துற கடையள் இருக்கெண்டில்லை. யாழ்ப்பாணத்தில இப்ப பியூட்டி பார்லரும், பச்சை குத்திற கடையளும், ஜிம் சென்ரர்களும்தான் சந்திக்குச் சந்தி திறபடுகுது. முந்தின காலத்தில தோடு, கடுக்கன் குத்திற மாதிரி இப்ப பச்சை குத்திறதும் பஷனா மாறிட்டுது. பச்சை குத்தாட்டி ஏதோ தெய்வக்குற்றம் மாதிரி எல்லாரும் எங்கையாவது சின்னனாவாவது பச்சை குத்தத் தொடங்கிட்டினம். இது அவையவையின்ர விருப்பம். அதில ஆரும் தலைப்போட முடியாதுதான். ஆனால் அப்பிடி பச்சை குத்திற கடையள், பாதுகாப்பான இடமா எண்டதையும், தங்கட வாழ்க்கையைப் பாதிக்காத மாதிரி அங்க பச்சை குத்துவினமோ எண்டதையும் பாக்கோணும். கிட்டயில ஒரு பெடியன் நெஞ்சில பெரிசா பச்சை குத்தியிருக்கிறான். அடுத்தநாள் பச்சை குத்தின இடத்தில வலியோட, அரிக்கிற மாதிரியும் இருந்திருக்குது. ஆள் அதுக்கு மேல சவுக்காரம் போட்டு நல்லாக் கழுவியிருக்குது. பிறகு பார்த்தால் அந்த இடம் பொக்களமாகி, அவிஞ்சு, பச்சையும் சீரழிஞ்சு. இப்ப அந்த அவியலுக்கு மருந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்.

பச்சை குத்திறதுக்கெண்டு தரமான மை இருக்கு. அது காசு கூட. அதால இப்ப பச்சை குத்திற கடையள் திறக்கிறவை லாபத்துக்காக கண்டகண்ட மையெல்லாம் பாவிக்கினமாம். அதோட அவைக்கு ஒழுங்கான ட்ரெய்னிங்கும் இல்லை. பச்சை குத்திற ஊசியளையும் ஒழுங்கா கிருமிநீக்கம் செய்யினமோ எண்டும் தெரியாது. எய்ட்ஸ் பரவிற வழியளில இந்தப் பச்சைகுத்திற ஊசியளும் ஒண்டு. அதால எங்கட சுகாதாரப் பிரிவுக்காரர் உந்தப் பச்சை குத்துற இடங்களை கண்ணில் எண்ணெய் விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறதோட , அப்பிடி பச்சை குத்திற கடையளுக்கு அனுமதி குடுக்கேக்க கடும் கட்டுப்பாடுகளை விதிக்கிறதும் கட்டாயம். இல்லாட்டி எங்கட சந்ததி பச்சை குத்திறதாலையும் அழிஞ்சதெண்டு வரலாற்றில வந்திடும்.

padsi@uthayan.com - பட்சி

## மணல் கடத்தல் வடமராட்சியில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்ற மணல் கடத்தலைத் தடுக்கமுற்பட்டவேளை பொலிஸ் அலுவலர் ஒருவர் கடத்தல் வாகனத்திலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

துன்னாலை - வல்லிபுரம் வீதி ஊடாக மணல் கடத்திவந்த குறித்த மகேந்திரா ரக வாகனத்தைப் பருத்துத்துறை - மருதங்கேணி வீதியில் வைத்துப் பொலிஸார் மறித்துள்ளனர்.

வாகனம் நிறுத்தப்பட்டதையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதில் ஏறி சோதனையிட்டுள்ளார்.

இதன்போது கடத்தல்காரர்கள் வாகனத்தை தாறுமாறாக வேகமாக செலுத்திச் சென்றபோது அதிலிருந்து பொலிஸ் அலுவலர் வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். எனினும் தப்பிச் சென்ற வாகனத்தைப் பொலிஸார் மடக்கிப்பிடித்து கைப்பற்றியுள்ளனர். அத்துடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ச-100)



## தேராவிலில் பதுக்கப்பட்ட பாலைமரக்குற்றிகள் மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் அனுமதிப்பத்திரம் மற்றும் முத்திரைக் குறியீடுகள் அற்ற நிலையில் வீட்டில் மறைத்துவைக்கப்பட்ட 25 லட்சம் ரூபா பெறுமதியான பாலைமரக் குற்றிகளை வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் அண்மையில் மீட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு வனவளத் திணைக்களத்தினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக தேராவில் பகுதியில் உள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோதே அவை கைப்பற்றப்பட்டன. அதனை மறைத்து வைத்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-125)

LANKA
Sathosa
ලංකා සතොස லங்கா சதொச

## பொருள்கள் விலை சதொசவில் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

லங்கா சதொச 5 அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலையைக் குறைத்துள்ளது.

நிதி அமைச்சின் பணிப்புரைக்கமைய, நேற்று முதல் இந்த விலை குறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளதாக லங்கா சதொச தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் ஒரு கிலோ 10 ரூபா குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 220 ரூபாவாகவும் சிவப்புப் பருப்பு ஒரு கிலோ 3 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலை 285 ரூபாவாகவும் ஒரு கிலோ கோதுமை மா 10 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலை, 165 ரூபாவாகவும் வெள்ளைச் சீனி ஒரு கிலோ 5 ரூபா குறைக்கப்பட்டு 235 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-இ)

## யோஷிதவிடமிருந்து 5 துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு, ஜன. 31

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்சவிடம் இருந்த 7 துப்பாக்கிகளில் 5 துப்பாக்கிகளைப் பாதுகாப்பு அமைச்சகம் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யா கோத்தா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் புதன்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

கடந்த 23.01.2023 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

மண்கும்பானின் புதல்வி

## அமரர் திருமதி நடராசா தங்கமலர்

பிறப்பு
29.12.1949



இறப்பு
23.01.2023



உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அம்மாவே!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அம்மா...



அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினைவுநாளான இன்று (31.01.2025) வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப்பேரவை - செல்வச்சந்நிதி தொண்டமானாறில் அன்னதானம் இடம்பெறும்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**








**நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்**
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சந்தோஷ் ஜுவல்லர்ஸ்**
இல. 97A,99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நடராசா கஜந்தன் குடும்பத்தினர்
நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்
சந்தோஷ் ஜுவல்லர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மோசமான சாக்குபோக்குகள் என்பது எதுவும் சொல்லாததைவிட மட்டமானது.

– தோமஸ் புல்லர்

## மாவையின் மறைவு பேரிழப்பே!

தமிழ்த்தேசிய அரசியல் தளத்தில் வரலாறுகளை அறிந்த மூத்த அரசியல்வாதியான மாவை சோ.சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கு பெரும் இழப்பு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. தனது வாழ்வில் பெரும்பகுதியை அரசியல் பயணத்தில் செலவிட்ட மாவை ஐயா தனது 83 வயதில் எதிர்பாராத வகையில் இந்த உலகில் இருந்து விடைபெற்றிருக்கின்றார்.

*1942 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் பிறந்த மாவை சேனாதிராஜா, தனது 19ஆவது வயதில் -1961ஆம் ஆண்டு தந்தை செல்வாவுடன் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றினார். தனது 20ஆவது வயதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்டார். தமிழ் மக்களுக்கான அரசியல் போராட்டத்தில் தன்னைத் தொடர்ச்சியாக இணைத்துக்கொண்ட மாவை, 1969ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டுவரையில் இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் 7 ஆண்டுகளைத் தொலைத்தார். அதன்பின்னரும் தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து விலகாத மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினராக, கட்சியின் தலைவராகத் தனது அரசியல் பணிகளைத் தொடர்ந்தார். ஏறத்தாழ 63 ஆண்டுகளாகத் தன்னை அரசியல் பணிகளில் அவர் இணைத்திருக்கின்றார்.*


ஆயுதப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் களம் படிப்படியாகச் சிதைந்து வருகின்றது என்பது கண்கூடு. தமிழ்த் தரப்பில் அனுபவமும், அரசியல் காய்நகர்த்தலும் தெரிந்த தலைவர்கள் குறைந்துள்ளமை இதற்கு முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பொருத்தமான தீர்மானங்களை எடுத்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நகர்த்திச் செல்லக்கூடிய திறன் வாய்ந்த - கடந்தகாலச் சம்பங்களை அச்சொட்டாக அறிந்த -அவற்றின் மூலம் கிடைத்த படிப்பினைகளுக்கு ஏற்ப தற்காலத்தில் நகர்வுகளை மேற்கொள்ளக்கூடிய தமிழ் அரசியல் தலைவர்களின் மறைவும் தமிழினத்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது.

மாவை சோ.சேனாதிராஜாவின் மறைவும் தமிழ் அரசியல் தளத்தில் பெரும் வெற்றிடத்தை உருவாக்கும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றை நுணுக்கமாக அறிந்திருந்த அரசியல் தலைவரான மாவை சோ.சேனாதிராஜாவின் அனுபவ அறிவும், ஆலோசனைகளும் இனிக்கிடைக்காது என்பது தமிழ் அரசியல்வாதிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் பெரும் இழப்பாகவே இருக்கும். விமர்சனங்களைச் சந்திக்காத மனிதர்கள் இல்லை என்றவகையில், மாவை சோ.சேனாதிராஜா மீதும் சில விமர்சனங்கள் முன்வைக்கப்படலாம். ஆனால் ஒற்றுமையைக் கருதி அனைவருடனும் இணக்கமான - விட்டுக்கொடுப்புடன் - சுமுகமான முறையில் அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க முயன்ற ஒரு அரசியல் தலைவராக அவர் விமர்சனங்களைச் சந்தித்திருந்தபோதும், தமிழ்த்தேசியத்துக்கான பயணத்தில் அவர் எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றியே செயற்பட்டிருந்தார்.

**தனது வாழ்வின் பெரும்பகுதியைத் தமிழர் அரசியல் போராட்டத்துக்காகச் செலவிட்டு, இறுதிவரை தமிழ் மக்களுக்கான அரசியல் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயலாற்றிய மாவை. சோ.சேனாதிராஜா தமிழ் மக்களின் அரும் அரசியல் சொத்தென்பதில் மாற்றுக்கருத்து இருக்கப்போவதில்லை. தமிழ் மக்களுக்காகத் தன்னை வருத்தி, தன்வாழ்வை அர்ப்பணித்த இந்த அரசியல் பெருந்தகைக்கு 'உதயனின்' அஞ்சலிகள்'**



## தேங்காய்த் தட்டுப்பாடு; உற்பத்திகள் இறக்குமதி



கொழும்பு, ஜன. 31
தற்போதைய தேங்காய்ப் பற்றாக் குறையைச் சமாளிக்க, இந்தோனேசியாவில் இருந்து தேங்காய் உற்பத்திகளை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவிக்கையில்,

இந்தோனேஷியா தேங்காய்ப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு மிகவும் பொருத்தமான நாடு. தேவைக்கு ஏற்ப தேங்காய் தொடர்பான பொருள்களை இறக்குமதி செய்ய தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். மொத்தமாக 200 மில்லியன் தேங்காய்களுக்கு சமமான தேங்காய் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இதுதொடர்பில் புதிய அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது - என்றார். (ச-இ)

## முறைப்பாடளிக்க வட்ஸ்அப் இலக்கம்

கொழும்பு, ஜன. 31
பொதுமக்களிடமிருந்து எழுத்துபூர்வ முறைப்பாடுகளைத் துரிதமாக பெறுவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் புதிய வட்ஸ்அப் இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடம் அல்லது அந்தத் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டிய மேல்முறையீடுகள் அல்லது முறைப்பாடுகளை 0714033300 என்ற வட்ஸ்அப் எண்ணுக்கு எழுத்துபூர்வமாக அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## சைபர் பாதுகாப்பு மையம் விரைவில்

கொழும்பு, ஜன. 31
நாட்டில் சைபர் பாதுகாப்புச் செயற்பாட்டு மையத்தை ஸ்தாபிப்பதற்கு இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தீர்மானித்துள்ளது.

சைபர் பாதுகாப்புச் செயற்பாட்டு மையத்தால் தெரிவு செய்யப்பட்ட 40 அரச நிறுவனங்களின் வலைத் தளங்களை சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் செயற்பாடு முதற்கட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறுவயதுக் கர்ப்பம் நாட்டில் உயர்வு

கொழும்பு, ஜன. 31
2024 ஆம் ஆண்டில் சிறுவயதுக் கர்ப்பங்கள் 213 ஆக அதிகரித்துள்ளதாக குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக விசாரணைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டில் 167 குழந்தைக் கர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. 2024 ஆம் ஆண்டில் இது அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## தேயிலை ஏற்றுமதியால் 1.43 பில்லியன் டொலர்

கொழும்பு, ஜன. 31
2024 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் இலங்கை 1.43 பில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


கடந்தாண்டு இலங்கை 245.79 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது. 2024 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோ தேயிலைக்கு சராசரியாக 5.84 டொலர் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
சனிக்கிழமை - தை - 19
01.02.2025
(சதுர்த்தி விரதம்)
சுபநேரம் : 03.36 - 05.06
ராகுகாலம் : 09.36 - 11.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை
## தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு
### காலம் - 31.01.2025



ஈ.ஹர்னிகா 168 | யோ.அஜேஷ் 167 | சு.கிசோத் 161 | இ.ஜெஷ்வினா 159 | சி.ஹரிஸ் 156 | தே.ருவேனி 156 | த.பூமிஷா 156 | த.நிவேகிகா 155 | கு.சகித் 152 | பி.தஸ்மியா 152

சுவிஸ்னா 150 | பு.றக்ஷானி 149 | த.யதுநிலன் 149 | கு.பிரவீனா 149 | ஆ.ஜஸ்மிகன் 148 | கா.டிவியா 146 | சி. குபிலன் 145 | அ. டிவியா 145 | ச.கேசிகன் 145 | து.வபீசன் 142

க.கபினாஸ் 137 | க.கஜிஷாந் 137 | பி.ஆதனா 136 | ச.ரனோசன் 135 | சே.தருண் 135 | ந.நிதுர்சிகா 134 | த.சஸ்வின் 134 | க.சங்கீத் 133 | த.அக்ஷயன் 132 | அ.சஷ்மிகா 132

அ.சாருகா 132 | க.சசிகேஷ் 131 | கா. சாருசன் 131 | தி.துலக்சிகன் 130 | அ.சஸ்மிதா 130 | அ.டிவினா 130 | ம.அஜேஷ் 130 | ர.அபிநயா 129 | ற.அக்ஷயா 127 | கே.யுசானா 127

தி.சியான் 127 | ஐ.ஸ்வஸ்திகா 127 | நி.நவின் 125 | சு.நொமிஸ்கா 124 | வி.துசாரகா 120 | சு.சுபீட்சன் 121 | உ.யதுசியா 117 | ஜெனுசன் 119 | க.துகீஸ் 117 | சோ.பதுசாளினி 117

வ.அகிம்ஷா 117 | ம.அஸ்விகா 117 | ர.சன்திகன் 116 | ஜெ.ஹரிஸ் 115 | வா.மிதுஷா 108 | ச.யதுவர்மன் 107 | பா.ரிசாந் 106 | சு.சஞ்சியன் 105 | த.வதுர்ஜன் 104 | ம.ரிவிஷாந் 102

நி.ஜபிஷன் 101 | க.கேஸ்மிகா 110 | தி.ஹர்சனா 97 | த.டிஷான் 97 | ந.அபித் 92 | ச.சிவனிதா 92 | கி.டனிக்சன் 90 | நி.கஸ்வின் 87 | வி.டினோசன் 85 | பி.டிலக்ஷன் 75

அ.கபிஷன் 67 | கி.நிதுஷா 64 | செ.தர்மிகா 64 | லூ.பிரவீன் 64 | பு.அபிசாலினி 62 | சொ.சோபனன் 56 | ஜெ.ரேனுஜன் 82 | கா.அனிருத் 88 | சி.றினுட்ஜன் 73 | பி.கேதுசன் 63

அ.ஹரிஸ் 60

| | | |
|---|---|---|
| மாணவர் தொகை | : | 81 |
| தோற்றியோர் தொகை | : | 81 |
| வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் | : | 25 % |
| 100 புள்ளிகளுக்கு மேல் | : | 77 % |
| 70 புள்ளிகளுக்கு மேல் | : | 90 % |



திரு.க.இளங்கோவன் அதிபர் | திருமதி த.சுதாகரன் பிரதி அதிபர் | திருமதி.கோ.திருக்கேதீஸ்வரன் ஆசிரியர் | திருமதி க.கதிர்காமநாதன் ஆசிரியர் | திருமதி க.அபூர்வபாலன் ஆசிரியர்.

**அனுசரணை :**

**பூதத்தம்பி பாஸ்கரன் அவர்கள் (நரசிங்கம் பாம் & விற்பனை)**

**கட்டட ஒப்பந்ததாரரும் கட்டடப் பொருள் உற்பத்தியும், விற்பனையும்**

பதிவு இல. TN/DS/PS/0505 on 10 th May 2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 31
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக யாழ்.மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது பூதவுடலுக்கு நேற்றுக் காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் பிரதான உறுப்பினர்களால் தமிழரசுக் கட்சியின் கொடி போர்க்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டு உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்தோடு மதத் தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

மாவை சேனாதிராஜா நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-20,66,125,27)





நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் , நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான அரியநேத்திரன், யோகேஸ்வரன்...



நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ....



உதயன் குழுமத்தலைவரும் பாரியாரும்...



யாழ். இந்தியத் துணைத்தூதுவர்...



நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிராஜின் பாரியார் சசிகலா

# மாவை சேனாதிராஜா மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு

## கடற்றொழில் அமைச்சர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 31
அறவழிப் போராட்டம், சிறைவாசம் எனத் தனது ஐந்து தசாப்தகால அரசியல் பயணத்தில் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பிவந்த மாவை சேனாதிராஜாவின் மறைவு, தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அநீதிக்கு எதிராகவும், நீதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் துணிந்து குரல் கொடுத்த மாவை சேனாதிராஜா, ஜே.வி.பியின் ஸ்தாபகர் தோழர் ரோஹண விஜேவீரவின் போராட்டங்களைக்கூட நேர் கொண்ட பார்வையுடன் அவதானித்தார்.

ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு எதிராக ஜே.வி.பி.யின் அணுகுமுறை தொடர்பில் ஆதரவு போக்கை கடைபிடித்தவர்.

5 தசாப்தகால அரசியல் பயணத்தின்போது, மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்ட அரசியல்வாதியாவார். மாவை அண்ணன் மறைந்தாலும், மக்களுக்காக அவர் எதிர்பார்த்தவற்றை நிச்சயம் நாம் செய்வோம் - என்றுள்ளது. (ச-20)

# மாவை சேனாதிராஜா தமிழ்த்தேசிய அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜன. 31
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக மாவை சேனாதிராஜா ஒரு தமிழ்த்தேசிய அடையாளம் என்பது நிதர்சனம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா மறைவு தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

மிக நீண்ட காலமாக தமிழர் ஜனநாயக சாலையில் பயணித்த, மாவை சேனாதிராஜா என்ற தமிழ் தேசிய வாகனம் நின்றுவிட்டது. இந்தச் சோகத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் பங்குகொள்கிறோம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி
## நடராசா தங்கமலர்

பிறப்பு 29.12.1949 — இறப்பு 23.01.2023

**31.01.2025**

ஆண்டுகள் இரண்டாகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்

நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
உங்களின் ஆயுள் கணக்கை
மாற்றி போட்டிருக்கலாம் இறைவன்
மனமிரங்க மறுத்தரோ இறைவனும்

இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்

தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர சிந்தை நிறைய
வேண்டி வணங்குகிறோம் "அம்மா"
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**"சிவசனுஜாஸ் இல்லம்"**
**இல. 55,**
**அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**உரிமையாளர் -**
**மைதிலி நகைமாடம் (Pvt) Ltd)**
**யாழ்மைதிலி ஜுவலர்ஸ்**

# மரண அறிவித்தல்

## டென்சில் சேவியர் மேரி றோஸ்

**(முன்னாள் ஊழியர் வடகடல் நிறுவனம் (சீனோர்), குருநகர்)**



குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டென்சில் சேவியர் மேரி றோஸ் (முன்னாள் ஊழியர் வடகடல் நிறுவனம் (சீனோர்)) நேற்றுமுன்தினம் (29.01.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பற்றிக்-ராக்கினி தம்பதியரின் அன்பு மருமகளும் சேவியர் (உரிமையாளர்-கதிசன் ஹாட்வெயார்) அவர்களின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, இராசறாணி, யோகம், அருட்தந்தை யேசுரட்ணம் (பங்குத்தந்தை நாவாந்துறை) இராஜசூரி, பெனற் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மோட்டியர் காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் சின்ராசா, அழகு, யான்சி (சுவிஸ்) காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் சரஸ், ஜெறாட் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுவைனஸ் (அதிபர் மண்டைதீவு றோ.க.வித்தியாலயம் ), சுகந்தி (பிரான்ஸ்), சுரேக்கா, காலஞ்சென்ற சுபாஜனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் றெஜிமலா (கதிசன் ஹாட்வெயார்), ஜிம்றோன் (பிரான்ஸ்), சாள்ஸ் பிறின்ரன் (கதிசன் ஹாட்வெயார்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிஷாந், மேரி சுவைனியா, கதிசன், கனிஸ்ரன், சுஜிக்கா (பிரான்ஸ்), சாமுவேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.02.2025) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப 2.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு பி.ப 2.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருபலி நிறைவேற்றப்பட்டு புனிதகொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 15.10.1954 — **மறைவு** 29.01.2025

**இல 7, 1ம் குறுக்குத்தெரு**
**குருநகர்**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 400 6399**

(CS 157369) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்தகைமைச் சான்றிதழ் - 5 இல்லாதவர்களுக்குப் பணிநீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

வடமாகாணத்தில் தொழிற்தகைமைச் சான்றிதழ் 4 மற்றும் 5இனை கொண்டிராத படவரைஞர்கள் மேலும் இரண்டு வருடங்கள் திணைக்களங்களில் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் காணப்படுகின்ற 200 படவரைஞர்களின் வாழ்வாதாரம் பாதிக்கபடவுள்ளதாகவும் இது தொடர்பில் நகர அபிவிருத்திசபை கரிசனையுடன் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்திலும் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்தே வடமாகாணத்தில் தொழிற்தகைமைச் சான்றிதழ் 4 மற்றும் 5இனை கொண்டிராத படவரைஞர்கள் மேலும் இரண்டு வருடங்கள் திணைக்களங்களில் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் தற்போது 200 படவரைஞர்களே காணப்படுகின்றனர். அவர்களே கட்டடங்கள், கட்டட புனர்நிர்மாணங்கள் தொடர்பான படங்களை வரைந்து வந்தனர். ஆனால், படவரைஞர்களுக்கு தொழிற்தகைமை சான்றிதழ் 5 கொண்டிருக்க வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டது. இதனால் அவர்களின் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமற்போகும் நிலை தோன்றியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-125)

# மன்னாரின் வளங்களை அபகரிக்க அனுமதியோம்

## மன்னார் பிரஜைகள் குழுத்தலைவர் சுட்டிக்காட்டு

மன்னார், ஜன. 31

மன்னாரில் மக்களைப் பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின்உற்பத்தி மற்றும் கனியமணல் அகழ்வு ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார். மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்துகொள்ள தென்பகுதியில் இருந்து வந்த சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினருடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது காற்றாலை மின் உற்பத்தியால் மீனவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் உள்ளடங்கலாக மன்னார் தீவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும் மன்னாரில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கனியமண் அகழ்வால் மன்னார்த் தீவு அழியும் நிலையில் உள்ளமை குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் கனியமணல் அகழ்வால் ஒரு கட்டத்தில் கடல்நீர் கிராமங்களுக்குள் உட்புகும் நிலைமை பற்றியும் குறித்த குழுவினருக்கு எடுத்துரைக்கப்பட்டது. (ச-56)


கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 31.07.1945
மறைவு 13.01.2025

மூதாளர் அன்பு இல்லம், சிவபுரவளாகம்,
முகமாலையில் தற்காலிகமாக வசித்து
வருபவராகிய
மக்கள் வங்கி ஓய்வுநிலை முகாமையாளர்
திருமதி க. தவமணிதேவி
அவர்களின் அன்புக் கணவர்
பொன்னையா கணேசலிங்கம்
அண்மையில் காலமானார்
அன்னார் ஓமானில் பல வருடங்களாக
விமானப்படையின் Sergeant ஆக
பணிபுரிந்த காலத்தில் அவரின் நட்பினைப்
பெற்றிருந்தேன். மனிதநேயம் மிக்கவர்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.
தகவல் : K.Bala
மூளாய் (AWV - ஓமான்)


# ‘பயணிக்கின்றன பாதைகள்’ நூல் வெளியீடு



பளை, ஜன.30

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆரணியின் ‘பயணிக்கின்றன பாதைகள்’ கவிதை நூல் வெளியீடு நிகழ்வு பச்சிலைப்பள்ளி செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலர் இ. த .ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு சுவாமி தோட்ட இயக்குநர் அருட்பணி யூட் அமலதாஸ் அடிகள், சிறப்பு விருந்தினராக தர்மக்கேணி கலாபூசணம் செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதற்பிரதியினை கலைஞரும் சமூக செயற்பாட்டாளருமான பொ.மகாலிங்கம் பெற்றுக் கொண்டார். (ச-25,9)



மன்னார் அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (ச-25, 56)



ஊரெழு கணேச வித்தியாசாலையில் தரம் 1 இல் இணைந்துள்ள மாணவர்களுக்கான கால்கோள் விழா நேற்று வியாழக்கிழமை பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. (ச)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 13.05.1961



மறைவு 19.01.2025

கடந்த 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த
அமரர் வடிவேல் செல்வராஜா
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இரதபவனி ஆரம்பித்து சாட்டி வெள்ளக்கடற்கரை புனித தீர்த்தக்கரைக்கு எடுத்துச்செல்லப்படும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் 03.02.2025 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறியவர்களும் மற்றும் சகல விதங்களிலும் உதவியவர்களும் நேரில் அழைக்கத் தவறியவர்களும் இவ்வழைப்பை ஏற்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

124/15, செல்லர் வீதி,
நல்லூர்,
T.P.: 077 968 2939
076 116 0121
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30 • 10 • 1948

மறைவு 28 • 01 • 2025

## கனகசபை கந்தசாமி

(தலைவர் - வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபை;
தலைவர் - வவுனியா மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!!!

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
யாழ்மாவட்டக் கூட்டுறவுச்சபை

இல. 12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(cr.44206) (N-1)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேசசபை | :- | மல்லாகம் உப அலுவலகம் |
| உரிமையாளர் பெயர் | :- | சிவராஜா கைம்பெண் ஜெயகௌரி |
| விண்ணப்பதாரர் பெயர் | :- | சிவராஜா கைம்பெண் ஜெயகௌரி |
| முகவரி | :- | நீதிமன்ற வீதி. மல்லாகம் |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20.

வல்லைசங்கானை வீதியில் ஆதன இல. 54/13 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று. மல்லாகம் இறை "வேள்வை" என்ற ஆதனம் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு காயத்திரி அகிலன் முகதாவில் 2019.01.14ம் திகதியில் 2022.11.21ம் திகதியில் முறையே 973, 974, 2860ம் இலக்கங்களில் நிறைவேறிய அறுதி உறுதிகள் மூலம் மல்லாகம் இறை "வேள்வை" இறை முறையே நிலப்பரப்பு 03 குளி 1.65. நிலப்பரப்பு 03 குளி 1.65. நிலப்பரப்பு 02 குளி 8.5 விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரான சிவராஜா கைம்பெண் ஜெயகௌரி என்பவரை வந்தடைந்துள்ளது. மேற்குறித்த உறுதிகளில் 923ம் இலக்க உறுதி யாழ்ப்பாணக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பு122/50 இலக்க காணிப்பதிவுப் புத்தகத்தின் பிரதி இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் 974ம். 2860ம் இலக்க உறுதிகள் யாழ்ப்பாணக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிப் பதிவுப்புத்தக பிரதிகள் இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை. 973ம் இலக்க உறுதியின் தாயுறுதிகளாக 2006.02.03ம் திகதி பிரசித்த நொத்தாரிசு கு. விசுவலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1434ம் இலக்க. 1998.11.01ம் திகதி பிரசித்த நொத்தாரிசு மு. சபாநாதன் முகதாவில் நிறைவேறிய 4811ம் இலக்க. 2016.02.29ம் திகதி பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 5037ம் இலக்க. 2016.03.21ம் திகதி பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் 5173ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதியும் 2012.04.14ம் திகதி பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் 133ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் 5173, 5037, 133, 1434, 4811 ஆம் இலக்க உறுதிகளும் அவை யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள H800/136, H7396/202, H857/119, 120, G56/63 இலக்க காணிப்பதிவுப் புத்தக பிரதிகளும் இவ் ஆதன வரி பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பித்துள்ளார். மேலும் 5173ம் இலக்க உறுதி 5037ம் இலக்க உறுதியின் திருத்தல் உறுதியாகக் காணப்படுவதுடன் 5037ம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் குறித்த விபரங்கள் 5173ம் இலக்க உறுதியினால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 5037ம் 1434ம் இலக்க உறுதிகளின் தாய்உறுதியாக பிரசித்த நொத்தாரிசு ச.கணபதிப்பிள்ளை முகதாவில் 1924.02.03ம் திகதி 13756ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குறித்த உறுதியின் பிரதியோ அல்லது குறித்த உறுதி தொலைந்து விட்டமை தொடர்பில் காணிப்பதிவகத்தினால் வழங்கப்பட்டுள்ள கடிதமோ இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை. 4811ம் இலக்க உறுதியின் தாய்உறுதியாக பிரசித்த நொத்தாரிசு ச.கணகசபாபதி முகதாவில் 1963.12.13ம் திகதியில் நிறைவேறிய 4808ம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு சி.கணேசலிங்கம் முகதாவில் 1987.12.23ம் திகதி 2528ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது எனினும் குறித்த உறுதிகளின் பிரதிகளோ குறித்த உறுதிகள் தொலைந்ததாக காணிப்பதிவகத்தினால் வழங்கப்பட்ட கடிதங்களோ இவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை. 133ம் இலக்க உறுதியில் அதன் தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு சு.கனகராஜர் முகதாவில் 1937.06.03ம் திகதியில் நிறைவேறிய 5232ம் இலக்க உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குறித்த உறுதியின் பிரதிகளோ குறித்த உறுதி தொலைந்ததாக
காணிப்பதிவகத்தினால் வழங்கப்பட்ட கடிதம் இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படவில்லை. மேலும் குறித்த தாயுறுதிகளில் 5037. 14354 உறுதிகளின் மாதா வழி வந்த உரித்தும் ஆட்சியும் எனவும் 133ம் இலக்க உறுதியின் பிதாவழி மாமியார் கதிரவேலு பெண் திலகவதியின் வழி உரித்தான பிதா வழி முதுசம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குறித்த இவ் ஆதன் வரிப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் கடந்த 30 வருட ஆதன உரித்து வரலாற்றினை நிச்சயப்படுத்த முடியாதுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று. இது பிரசித்த நொத்தாரிசு காயத்திரி அகிலன் முகதாவில் 2019.01.14 ஆந் திகதி. 2022.11.21ம் திகதிகளில் முறையே 973. 974. 2860ம் இலக்கங்களில் நிறைவேறிய அறுதி உறுதிகள் மூலம் மல்லாகம் இறை "வேள்வை" இறை முறையே நிலப்பரப்பு 03 குளி 1.65. நிலப்பரப்பு 03 குளி 1.65.நிலப்பரப்பு 02 குளி 8.5 விஸ்தீரணமுள்ள ஆதனம் ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 26.11.2022ஆம் திகதியிட்டு 9579A ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் பிரகாரம் அளவுப்படி துண்டு 1 ஆகக்காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு ஒன்பது குளி ஏழு தசம் ஒன்பது ஆறு (நில.பர 09 குளி 7.96) இதற்கு எல்லைகள் 9579A நிலஅளவ்வைப்படத்தின் படி

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | சின்னத்துரை விக்னராஜா பெண் கனகாம்பிகையின் ஆதனம் |
| வடக்கு | :- | குமாரலிங்கம் பெண் சிவபாக்கியத்தின் ஆதனம் |
| மேற்கு | :- | பசுபதி கைம்பெண் அன்னம்மாவின் ஆதனம் மற்றும் செல்லையா சிறிகுமார் ஆதனம் |
| தெற்கு | :- | வைரவகோயில் ஆதனம் மற்றும் குறித்த ஆதனத்திற்கு போக்குவரத்துச் செய்யும் தனிப்பட்ட ஒழுங்கை |

இவ்வாதனம் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் வரும் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் தெல்லிப்பளை. மல்லாகம் வடக்கு J/214 கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ளதாகும்.

மேற்குறித்த ஆதனத்தை சிவராஜா ஜெயகௌரி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் சிவராஜா ஜெயகௌரி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய
எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்
செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேசசபை.
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி )

# பல்கலை விரிவுரையாளர்கள் சேவைக்குத் திரும்பினார்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 31

பேராசிரியர் எஸ்.ரகுராமுக்கு ஆதரவாக பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்திருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்றுமுதல் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

பேராசிரியர் ரகுராமின் பதவி விலகல் கடிதத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா ஏற்க மறுத்துள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவையின் தீர்மானத்துக்கு அமைவாக அவர் கலைப்பீட பீடாதிபதியாகத் தொடர்வதற்குச் சம்மதித்திருந்தார்.

இதையடுத்து, பல்கலைக்கழக ஆசிய சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதுமேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமையவே போராட்டத்தைக் கைவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பேராசிரியர் ரகுராமும் கடமையைக் பொறுப்பேற்பதாக அறிவித்துள்ளார். (ம-இ)

# பசுக்கள் கடத்தல்; பொலிஸார் முறியடிப்பு

வவுனியா, ஜன. 31

புளியங்குளம் பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் லொறியில் பசு மாடுகளைக் கொண்டுசென்ற சந்தேக நபர்கள் இருவரை புளியங்குளம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 27க்கும் அதிகமான பசு மாடுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## பெயர் மாற்றம்

சுன்னாகம் மேற்கு குண்டு குளத்தில் வசிக்கும் **கந்தையா சீதாலட்சுமி** ஆகிய நான் எனது பெயரை **கந்தையா சீதாதேவி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் கந்தையா சீதாதேவி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**கந்தையா சீதாதேவி**

(cs.57384) (N-1)

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21 மத்தியூஸ் வீதி, ஆதன இல 63, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பிலிப்பு நல்லையா இராஜேந்திரம் அமிர்தவாசகமும் பெண் மேரி ரோசம்மாவும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை வஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளையும் பெண் எலிசம்மாவும் 13.11.1970 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜே.ம. சைமன் முகதாவில் 595ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் (நெற். பர.2 (குளி 6.1/6) கிழக்கு புறமாக நிலப்பரப்பு 1 குளி 3.1/12 நிலப்பரப்பினை பிலிப்பு நல்லையா இராஜேந்திரம் அமிர்தவாசகமும் பெண் மேரி ரோசம்மாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை அமிர்தவாசகம் ஜோர்ஜ் ரவீந்திரன் 30.10.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு லி.துரைராஜா முகதாவில் 3435ம் இலக்க அறுதி உறுதி மூலம் (நெற். பர.2 (குளி 6.1/6) கிழக்கு புறமாக நிலப்பரப்பு 1 குளி 3.1/12 நிலப்பரப்பினை பொன்னையா அன்ரன் அனாசிஸ் எனபவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை. "குளத்து வளவு" நிலப்பரப்பு இரண்டு குளி ஆறுடன் ஒன்றின் கீழ் ஆறு (நெற். பர.2 (குளி 6,1/6) கிழக்கு புறமாக நிலப்பரப்பு 1 குளி 3.1/12 உம் வீடும் குசினியும் கிணறும் கக்கூசும் செய்யிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும்.

இதற்கு எல்லைகள்:-

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | சேவியர் கைம்பெண் லூர்த்தம்மாவின் ஆதனம். |
| வடக்கு | :- | வேலுப்பிள்ளை ஞானப்பிரகாசத்துக்கும் பெண் மரியப்பிள்ளைக்கும் உரிய ஆதனம். |
| மேற்கு | :- | சேதுப்பிள்ளை துரைராசா பெண் பிறிஜிற்றின் ஆதனம். |
| தெற்கு | :- | றோட்டு |

இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை பொன்னையா அன்ரன் அனாசிஸ் என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது பொன்னையா அன்ரன் அனாசிஸ் என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(CR 44210) V-1

## கும்பாபிஷேகம்

யாழ்., ஜன.31

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.21 மணி முதல் மு.ப.10.33 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் இரவு 9 மணி வரையும், நாளை சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரையும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25.66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரதின நிகழ்வில்

# வாகனத் தொடரணி இம்முறை இல்லை!

கொழும்பு, ஜன. 31
இலங்கையின் சுதந்திர தின நிகழ்வின்போது முப்படைகளின் ஆயுத வாகனத் தொடரணி இம்முறை இடம்பெறமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் துயகொந்தா மேலும் தெரிவித்ததாவது:-
இம்முறை சுதந்திரதின நிகழ்வுகளின் போது இராணுவ அணிவகுப்பில் பங்கேற்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை 40 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இம்முறை சுதந்திரதின நிகழ்வில் மூன்று விமானங்கள் மாத்திரமே பயன்படுத்தப்படும். சுதந்திரதின இராணுவ அணிவகுப்பில் இம்முறை ஆயிரத்து 873 இராணுவத்தினர் பங்கேற்பார்கள். இராணுவ அணிவகுப்பில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தைவிட 40 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.
76ஆவது சுதந்திர தின விழாவில் விமானப்படையின் 19 விமானங்கள் பங்குபற்றியுள்ளன. இம்முறை 3 விமானங்களே பயன்படுத்தப்படும். தேசியக் கொடியை கொண்டுசெல்வதற்காக அவை பயன்படுத்தப்படும். முப்படைகளின் ஆயுத வாகன தொடரணி இடம்பெறமாட்டாது -என்றார்.
(அ-ம-44)

## ஜனாதிபதி...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று இடம்பெறவுள்ளது. அதில் ஜனாதிபதி அநுர கலந்துகொள்ளவுள்ளார். அதைத் தொடர்ந்து, வல்வெட்டித்துறை மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் இடம்பெறும் மக்கள் சந்திப்புகளிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## போராடத்...

போராட்டங்களுக்குத் தடை விதிக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை யாழ். நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்கு இடையூறு இல்லாமல், அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான உரிமை சகலருக்கும் உள்ளது. ஆதலால், பொலிஸாரின் மனுவை ஏற்கமுடியாது என்று குறிப்பிட்டு, அவர்களின் கோரிக்கையை ஏற்பதற்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸாரால் தடை கோரிய தரப்புகள் சிலரின் சார்பில் சட்டத்தரணி மணிவண்ணன் நீதிமன்றில் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20-26)

## புதிய...

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில், 'புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த்தேசியம் சார்ந்த கட்சிகளை சந்தித்து வருகின்றார். உங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரனையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? என்று கேட்கப்பட்டது.
இதன்போது சுமந்திரன் தெரிவித்ததாவது:-
அரசாங்கத்திடம் ஒரு கோரிக்கையை விடுத்து நாங்கள் தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கின்றோம். அரசாங்கம் செய்வதாகச்சொன்ன விடயங்களை முதலில் செய்யவேண்டும். அந்த விடயங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறிருக்கையில், நாங்கள் புதிய அரசமைப்புத் தொடர்பில் யோசனைகளை முன்வைத்தால், அது அரசாங்கத்துக்கு ஏதுவாக அமையலாம். ஆகையால் முதலில் அரசாங்கத்தின் கருத்துக்கள் பெறப்படவேண்டியிருக்கின்றது.
இந்த விடயங்கள் தொடர்பில் முடிவுகளை எடுப்பதற்கு எமது கட்சி ஒரு குழுவை நியமித்திருக்கின்றது. அந்தக் குழுவே இது தொடர்பான விடயங்களை முன்னெடுக்கும் - என்றார்.
(அ-ம-100)

## சுதந்திர..

முப்படைத் தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் குறித்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
சுதந்திரதின நிகழ்வுகளுக்காக 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படும். முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை என சுதந்திர தின அணிவகுப்பில் மொத்தமாக 4 ஆயிரத்து 421 பேர் பங்கேற்கவுள்ளனர். இராஜதந்திரிகளுக்கு வழமைபோல் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரதின நிகழ்வுகளுக்காக 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது -என்றார்.
(அ-ம-44)

## அரச...

கம்பஹா, பொலநறுவை, மொனராகலைமற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் இந்த குழுக்கள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-6)

## தபால்...

வில் புறப்படும் தபால் ரயில் மறுநாள் அதிகாலை 4.35 மணியளவில் காங்கேசன்துறை ரயில் நிலையத்தை வந்தடையும். அதேபோன்று காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து இரவு 8 மணியளவில் புறப்படும் புகையிரதம் மறுநாள் அதிகாலை 4.40 மணியளவில் கொழும்பு கோட்டையைச் சென்றடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## போதையில்...

களை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளார். அத்துடன் அருகிலுள்ள தொலைக்காட்சி திருத்துமிடத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளார்.
இதையடுத்து, வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவே அந்த மதகுரு கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-18-110)

## ஹெரோய்னுடன்...

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே, செட்டிகுளம் பகுதியில் வைத்து அந்தப் பெண் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து ஒரு கிராம் 740 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் 2 கிராம் 380 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன. (அ-ம-110)

## வடக்கு...

கள். நாம் அரசியலில் எந்த பக்கம் இருந்தாலும் அவருக்காக முன்னிலையாவோம். அவரால்தான் வடக்கு, கிழக்கு பிரியாது நாடு பாதுகாக்கப்பட்டது.
வடக்கை வழங்கி இருந்தால் எத்தனை அரச கட்டடங்களை வழங்கி இருக்கவேண்டும்? நாட்டையும், வளங்களையும் பாதுகாத்த தலைவர் தான் மஹிந்த. எனவே, அவருக்குரிய அனைத்தும் வழங்கப்படவேண்டும்' - என்றார். (அ-ம-44)

## பெருந்தலைவர்...

தெல்லிப்பழையில் உள்ள தனது வீட்டில் வழுக்கிவிழுந்ததால் தலையில் குருதிப் பெருக்கு மற்றும் மூளையில் குருதிக் கசிவு ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில், சுவாசக் கருவிகளின் உதவியுடன் சிகிச்சை பெற்றுவந்த மாவை நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.
மாவையின் உடல் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், நேற்றிலிருந்து பெருமளவு மக்கள் திரள்திரளாகச் சென்று மாவைக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தூதரக அதிகாரிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரும் மாவைக்கு நேற்றுத் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

**ஞாயிறன்று இறுதிக்கிரியை**

மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கான இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை அவரது இல்லத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1 மணி வரை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றுப் பின்னர் அவரது புகழுடல் தகனக் கிரியைகளுக்காகக் கீரிமலை இந்துமயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுத் தகனம் செய்யப்படுமென குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ம-66)

## மாவைக்கு...

அஞ்சலி செலுத்துவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
எனினும், இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை. (அ-ம-26)

## தொழு...

வாகியுள்ளனர். அவர்களில் 12 வீத மாணவர்கள் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தொழுநோய் எதிர்ப்புப் பரப்புரை நடவடிக்கைகளுக்கான ஆலோசகர் திலினி விஜேசேகர மேலும் தெரிவித்ததாவது:-
உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்துப்படி, ஒரு நபர் சிகிச்சை பெறாத தொழுநோயாளிகளிடம் வாரத்தில் 20 மணி நேரத்திற்கும் மேலாக மூன்று மாதங்களுக்கு தொடர்பில் இருக்கும்போது நோய் உண்டாகும். நாட்டில் கடந்த ஒரு வருடத்தில் ஆயிரத்து 800 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளனர். அவர்களில் 10 முதல் 12 சதவீதமான நோயாளிகள் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்று தெரிய வந்துள்ளது. கணிசமான எண்ணிக்கையிலான நோயாளர்கள் மேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பதிவாகியுள்ளனர் - என்றார்.
(அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக் கூடும். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோனியம் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாய்வழியில் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**கடகம்:** மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதர வகையில் சிலசங்கடங்கள் ஏற்படக்கூடும். செலவு செய்யவேண்டி வரும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். பணி யாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவேண்டி வரும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். சகோதர வகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரம் வேண்டாம். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். குடும்பம் தொடர்பான வேலைகளுக்காக பயணம் மேற்கொள்ள நேரிடும். தெய்வப் பணிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

**கும்பம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோனியம் உண்டாகும் வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்கவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**மீனம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆனால், தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.



# மகாத்மா காந்தி சிரார்த்த நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 31
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் 77 ஆவது சிரார்த்த தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி மற்றும் அரியாலை காந்தி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலுள்ள காந்தி திருவுருவச் சிலைகள் அருகே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சங்கத்தின் தலைவரும் வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு. மோகனதாஸ், 'காந்தீயம்' பத்திரிகை ஆசிரியரும் நிர்வாகசபை உறுப்பினருமான எம்.ஷைந்தன் சத்திய கீர்த்தி, ஓய்வுநிலை அதிர்களான க.செல்வக்குமாரன், செ.சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ச-159)

# மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், ஜன. 31
மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலைய விரிவுரையாளர் நீ.தவராசா கலந்துகொள்ளவுள்ளார். (ச-33-159)



ஊரெழு மேற்கு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பெருமளவு அடியவர்களின் பங்கேற்புடன் பக்தி பூர்வமாக நடைபெற்றது. (ச-25,66)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.31
இராஜேஸ்வரி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், இராஜேஸ்வரி பசியாறும் சோலை திறப்பு விழா கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி திருமண மண்டப வளாகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25,66)

# ஞானச்சுடர் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 31
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில்வ, ஞானச்சுடர் சஞ்சிகையின் தை மாத 325 ஆவது மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் சு.தேவமனோகரன் மலரின் வெளியீட்டுரையையும், ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றவுள்ளனர். (ச-25,66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 31
சுன்னாகம் மயிலணி திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. 'கருட புராணம்' எனும் விடயப்பொருளில் சைவப்புலவர்களான கந்த. சத்தியதாசன், செ. த. குமரன், பொன். சந்திவேல், க. கைலநாதன், ச. முகுந்தன் ஆகியோரும் இளஞ்சைவப்புலவர்களான ச. நவநீதன், க. கயிலைவாசன் ஆகியோரும் சொற்பொழிவாற்றவுள்ளார்கள். (ச- 25)

## தவறவிடப்பட்டுள்ளன

நேற்று முன்தினம் புதன்கிழமை
29.01.2025 அன்று கனகபுரம் சந்தைக்கும்
ஊற்றுபுல சந்திக்கும் இடையில்
**தாலிக்கொடியும் கைச்செயினும்**
தவறவிடப்பட்டுள்ளன. இவற்றைக்
கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு
தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.
**"சன்மானம் வழங்கப்படும்"**
தொடர்புகளுக்கு:
**077 907 8029**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.